# கர்த்தர் உங்கள் முன்னே போவார், இஸ்ரவேலின் தேவன் உங்கள் பிறகே உங்களை காக்கிறவராயிருப்பார். ஏசா 52 : 12

**என் உண்மையற்ற வாழ்வும், அந்தரங்க பாவ ஜீவியமே**
**என் சமாதான குறைவிற்கும், என் கஷ்டத்திற்கும் காரணம்.**

18.11.1988 அன்று நெல்லை மாவட்ட 100 – கிராம ஊழியம் நடத்துவதற்கு வேண்டிய ஒழுங்குகளை செய்வதற்காக திருச்சியிலிருந்து பங்களா சுரண்டைக்கு பஸ்சில் பிரயாணம் பண்ணிக்கொண்டிருந்தேன். அப்பொழுது என்னையறியாமலேயே மேற்பட்ட தலைப்புகள் என் மனதில் எழும்பிக் கொண்டே வந்தன.

எப்படியெனில் திருச்சியிலிருந்து வீட்டை விட்டு புறப்படும் பொழுது 88 நவம்பர் மாத 100 – கிராம ஊழியம் பத்திரிக்கையில் 14ம் பக்கத்தில் பாதி பக்கம் மட்டும் மேலோட்டமாக வாசித்து விட்டு புறப்பட்டேன். அதில் TVGM Training Institute உடைய Director ன் அனுபவ சாட்சி இருந்தது. அவர் சாட்சியில் உள்ள 2 வரிகள் தான்,

என் உண்மையுற்ற வாழ்வும், அந்தரங்க பாவ ஜீவியமே,
என் சமாதான குறைவிற்கும், என் கஷ்டத்திற்கும் காரணம் – என்பதாகும்.

என் அன்பு சகோதரனே, சகோதரியே,

**உன் உண்மையுற்ற வாழ்வும், அந்தரங்க பாவ ஜீவியமே,**
**உன் சமாதான குறைவிற்கும், உன் கஷ்டத்திற்கும் காரணம்**

என்பதை உனக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

தயவு செய்து இனிமேல் மற்றவர்கள் மேல் நொந்து கொள்ளாதே, உன் மனைவியோ, பிள்ளையோ, பெற்றோரோ, நண்பரோ, சபையினரோ, கணவரோ காரணம் அல்ல. நீயே தான் காரணம்.

**ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொன்னார், இன்னும் உன்னிடத்தில் ஒரு குறை உண்டு** – என்பதாக.
கிறிஸ்மஸ் தினத்தை சந்தோஷத்தோடு கொண்டாட காத்துக் கொண்டிருக்கும், என் அன்பு சகோதரனே, சகோதரியே,
**இன்னும் உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு, உன் உண்மையற்ற வாழ்வும், அந்தரங்க பாவ ஜீவியமே.**
உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்.
நீ மரண பரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன். **வெளி 2 : 10** என்பதாக.
இந்த ஆசீர்வாதம் உனக்கு வேண்டாமா ?

இச்செய்தியை வாசிக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே, உண்மை உன்னில் காணப்பட கர்த்தரிடம் உன்னை தாழ்த்தி ஜெபம் பண்ணு. கர்த்தரோ உண்மையுள்ளவர். அவர் உங்களை ஸ்திரப்படுத்தி தீமையினின்று விலக்கிக் காத்துக்கொள்வார். **2 தெச 3 : 3**

**இரண்டாவதாக சங்கீதக்காரர் சொல்கிறார் :** இருதயத்தின் அந்தரங்களை அவர் அறிந்திருக்கிறாரே ... **சங்** 44 : 2 எங்கள் அந்தரங்க பாவங்களை, உமது முகத்தின் வெளிச்சத்திலும் நிறுத்தினீர். **சங் 90 : 8** என்பதாக.

அந்தரங்க பாவ ஜீவியத்தில் கஷ்டப்படும் என் அன்பு சகோதரனே, சகோதரியே,

அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா, வெளியரங்கமாய் உனக்கு பலனளிப்பார். **மத்தேய 6 : 6** என்பதாக.

**பிரசங்கி சொல்கிறார்.**

அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும், தீமையானாலும் தேவன் நியாயத்தில் கொண்டு வருவார்.

**பிர 12: 14 ஆதலால் பின்வரும் வசனங்களை சிந்தியுங்கள்.**

பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்திற்கு வந்தார். இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும், நீக்கி நம்மை சுத்திகரிக்கும். **ஆண்டவராகிய இயேசு சொன்னார்.** வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்திற்கு வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுகிறதில்லை என்பதாக. கர்த்தருடைய வசனத்தை நம்புங்கள்.

என் அன்பு சகோதரனே, சகோதரியே,

அந்தரங்க பாவத்தை வெறுத்து, உண்மையுள்ள வாழ்க்கை வாழ இன்றே தீர்மானியுங்கள். இயேசுவிடம் வாருங்கள். உங்களைப் புறம்பே தள்ள மாட்டார். இயேசு உங்களை நேசிக்கிறார்.

**கர்த்தர் உங்கள் முன்னே போவார்,**
**இஸ்ரவேலின் தேவன் உங்கள் பிறகே உங்களை காக்கிறவராயிருப்பார்.**